கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்,
வடமாகாணம்.

சுற்றுநிருபம் - 02/2019

2019.07.19.

## கூட்டுறவுச் சங்கங்களைத் தரப்படுத்தல்.

வடமாகாணத்திலுள்ள பல்வேறு வகையான கூட்டுறவுச் சங்கங்கள் அவற்றினது நிதி மற்றும் தொழிற்பாட்டு நிலமைகளில் ஏற்ற இறக்கங்களைக் கொண்டுள்ளன. இந் நிலமைகள் தொடர்ச்சியாக ஒரே மாதிரியல்லாது மாற்றங்களுக்கு உள்ளாகி வருவதையும் காணக்கூடியதாகவுள்ளது. இவ்வாறு முன்னேற்றகரமான அல்லது மாற்றங்களாகப் பின்னடைவுகளை முகங்கொள்பவர்கள் அக் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்களும் பணியாள்தொகுதியினரும் ஆவர். இவ்வாறு நடைபெறும் மாற்றங்கள் காத்திரமான முறையில் பிரதிபலிக்கப்படும் போது மாத்திரமே அதன் உண்மையான பலாபலன்கள் உணரப்படும். அதேபோன்று இம் மாற்றங்களை அடிப்படையாகக்கொண்டு தேசிய மற்றும் மாகாண கொள்கை வகுப்பாளர்களும், கொடைமுனைவர்களும் கூட்டுறவுச்சங்கங்களை அணுக முடியும். செயல்திட்டங்களை குவியப்படுத்தி வழங்க முடியும்.

மேற்கூறப்பட்டவற்றைக் கருத்திற்கொண்டு வடக்கு மாகாணத்திலுள்ள கூட்டுறவுச்சங்கங்களை அவற்றின் நிதி மற்றும் தொழிற்பாட்டிற்கு ஏற்ப தரப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இத் தரப்படுத்தல் செயற்பாடுகள் முடிவடைந்த கணக்காய்வு ஆண்டுகளை அடிப்படையாகக் கொண்டு செயற்படுத்தப்படும். சங்க நிர்வாகத்தினர் தாங்கள் ஒரு குழுவை உருவாக்கி அக் குழு மூலம் இத்தரப்படுத்தலை மேற்கொண்டு உரிய மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் அனுமதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். இத்தரப்படுத்தலின் போது தரங்களுக்கு ஏற்ப பணியாள்தொகுதியினரின் பதவிகளும் பதவிக்குறியீடுகளும் மாற்றமடையும். இந்த ஆளணி சீராக்கத்திற்காக மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் சிபாரிசுடன் கூட்டுறவுச் சங்க பதிவாளருக்கு விண்ணப்பித்தல் வேண்டும். தரப்படுத்தப்பட்ட சங்கங்கள் ஆகக்குறைந்தது மூன்று ஆண்டுகளின் பின்னர் மீள்பரிசீலனையொன்றைச் செய்து தரப்படுத்தலில் முன்னேற்றத்தைக் காண்பித்து அனுமதி பெறலாம். குறித்த சங்கத்தின் தரத்தை தொடர்ந்து பேணுவது அச்சங்கத்தின் முகாமையின் (இயக்குனர்சபை) பொறுப்பாகும். ஒவ்வொரு ஆண்டு தொடக்கத்திலும் தரப்படுத்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் பட்டியலொன்று கூட்டுறவுச்சங்க பதிவாளரால் சுற்றுநிருபமாக வெளியிடப்படும்.

தரப்படுத்தல் செயற்திட்டம் வருமாறு,

- ➢ **பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களினை தரப்படுத்தல் செயற்திட்டம்.**

பலநேக்கு கூட்டுறவுச் சங்கங்களின் தரத்திற்கமைவாக பணியாளர்களின் சம்பள வகைப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கமைவாக சங்கங்களை கீழ் குறிப்பிடப்படும் வகையில் மதிப்பீடு செய்யப்படவுள்ளது.

1. முயற்சிகளின் பல்வகைத்தன்மை

இதன் அடிப்படையில் ஒவ்வொரு சங்கங்களும் பின்வரும் முயற்சிகளை மேற்கொள்ளும் போது அவற்றுக்கு தரப்பட்டமதிப்பீடுகளின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும்.

| இல | முயற்சிகள் | மதிப்பிடப்பட்டபுள்ளி | மொத்தப் புள்ளி |
|---|---|---|---|
| 1. | நுகர்ச்சிவியாபாரம் (அடிப்படை தகைமை) | 40 | 40 |

| | | | |
|---|---|---|---|
| 2. | முகவர் சேவை (ஒன்றுக்கு 10% ஆகக்கூடுதலாக இரண்டு முகவர் சேவை) | **10 X 2** | **20** |
| 3. | உற்பத்தித்துறை (ஒன்றுக்கு 10% ஆகக்கூடுதலாக மூன்று உற்பத்திகள்) | **10 X 3** | **30** |
| 4. | விவசாயத்தொழில் / பண்ணைஅமைப்பு | **10** | **10** |
| | மொத்தம் | | **100** |

2. மொத்தவிற்பனை

சங்கத்தின் மொத்த விற்பனையில் நுகர்ச்சி விற்பனை ,எரிபொருள் விற்பனை என்பன வருடத்துக்கு 50 மில்லியனுக்கு 2 புள்ளிகள் வீகிதம் ஆக்கூடுதலாக 2500 மில்லியன். இங்கு எரிபொருள் விற்பனை கணக்கிடும் போது கிளைகளுக்கு மாற்றம் செய்த மண்ணெண்ணை விற்பனை இரட்டை கணிப்பீட்டுக்கு உட்படாதவகையில் எரிபொருள் விற்பனையில் இருந்து கழிக்கப்படல் வேண்டும்.)

3. **பணியாளர்களின் சம்பளம்.**

பணியாளர்களின் சம்பளம் மொத்த இலாபத்தில் 50% காணப்படின் ஆகக் கூடுதலாக 100 புள்ளிகளும், 100 % காணப்படின் ஆகக் குறைந்த புள்ளியான "0" (பூச்சியம்) உம் என்ற விகிதத்தில் புள்ளிகள் இடப்படல் வேண்டும்

4. தொழிற்படு மூலதனம்

தொழிற்படு மூலதனம் 2:1 என்ற விகிதத்தில் காணப்படல் வேண்டும். இங்கு சொத்து 2 ஆக உள்ள போது பரிப்புகள் 1 ஆக கணப்படின் ஆகக்கூடுதலாக 100 புள்ளிகளும் சொத்து 1ஆக உள்ள போது பரிப்புக்களும் 1ஆக காணப்படின் ஆகக்குறைந்த புள்ளியான "0" (பூச்சியம்) உம் என்ற விகிதத்தில் புள்ளிகள் இடப்படல் வேண்டும்

தொழிற்படு மூலதனம் கணீப்பீடு செய்யும் போது கீழ்குறிப்பிடப்படும் அட்டவணையில் உள்ளதற்கமைவாக கணீப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.

| இல | விபரம் |
|---|---|
| 01 | நடைமுறைச் சொத்துக்கள் |
| 1.1 | வியாபார பொருளிருப்பு |
| 1.2 | கடன்பட்டோர் (ஒரு வருடத்திற்கு உட்பட்ட நடைமுறை வருமதிகள்) |
| 1.3 | வருமதியாளர்கள் (ஒரு வருடத்திற்கு உட்பட்ட நடைமுறை வருமதிகள்) |
| 1.4 | முற்பணங்கள் (ஒரு வருடத்திற்கு உட்பட்ட நடைமுறை வருமதிகள்) |
| 1.5 | வங்கி வைப்புக்கள் (நடைமுறைக்கணக்கு மீதி, சேமிப்பு கணக்குமீதி, ஒரு வருடத்திற்குட்பட்ட நிலையான வைப்புகள்) |
| 1.6 | கையிருப்பு |
| 02 | நடைமுறைப் பரிப்புக்கள் |
| 2.1 | வைப்புக்கள் (சேமிப்பு வைப்புகளும் ஒரு வருடத்திற்குட்பட்ட நிலையான வைப்புகள்) |
| 2.2 | குறுங்கால கடன்கள் |
| 2.3 | கடன்கொடுத்தோர் (ஒரு வருடத்திற்கு உட்பட்ட நடைமுறை சென்மதிகள்) |
| 2.4 | சென்மதியாளர்கள் (ஒரு வருடத்திற்கு உட்பட்ட நடைமுறை சென்மதிகள்) |
| 2.5 | கூட்டுறவு நிதிச் சென்மதி |
| 2.6 | வங்கி மேலதிகப்பற்று |

மேற்படி கணிப்பீடானது அடிப்படை ஆண்டாக 2016/2017இல் முடிவடைந்த நிதியாணடில் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கறிக்கைகளில் இருந்து பெறப்பட்ட தரவுகளில் இருந்து கணிப்பீடு செய்யப்படுதல் வேண்டும். இவ்வாறு புள்ளிகள் கணிப்பிட்ட பின் நான்கு புள்ளிகளையும் கூட்டி வரும் விடையை நான்கால் வகுத்தபின் வரும் சராசரியானதற்கு பின்வரும் வகையில் தரப்படுத்துதல் வேண்டும்.

| தரம் | சரசரிபுள்ளிகள் |
|---|---|
| A | 80 – 100 |
| B | 70 – 79 |
| C | 60 – 69 |
| D | 50 – 59 |
| E | 40 – 49 |
| F | 30 – 39 |
| G | 0 – 29 |

தரங்களின் பெறுபேற்று அடிப்படையில் சங்கப் பணியாளர்களது சம்பள அளவுத்திட்டங்கள் பின்வரும் வகையில் மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும். சம்பளஅளவுத்திட்டங்கள் அதிகரிக்கும் போது அளணி அங்கீகாரத்தில் மாற்றங்கள் அனுமதிக்கப்பட்டபின்பே அதிகரித்த சம்பளத்தை வழங்குதல் வேண்டும். மாறாக சம்பள அளவுத்திட்டங்கள் குறைவடையும் போது ஏற்கனவே பதவிநிர்ணயம் செய்யப்பட்ட பணியாளர்கள் அப்பதவியில் இருந்து விலகும் வரை தாங்கள் பெற்று வந்த சம்பளத்தை பெற்றுக்கொள்ளலாம் என்ற நிபந்தனையின் அடிப்படையில் ஆளணி அங்கீகாரம் மீளாய்வுக்கு உட்படுத்துதல் வேண்டும்.

➢ **பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களினை தரப்படுத்தல் செயற்திட்டம்**

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் தரத்திற்கமைவாக பணியாளர்களின் சம்பள வகைப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கமைவாக சங்கங்களை கீழ் குறிப்பிடப்படும் வகையில் மதிப்பீடு செய்யப்படவுள்ளது. இதன் அடிப்படையில் ஒவ்வொரு சங்கங்களும் பின்வரும் முயற்சிகளை மேற்கொள்ளும் போது அவற்றுக்கு தரப்பட்டமதிப்பிடுகளின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும்.

| இல | முயற்சிகள் | மதிப்பிடப்பட்டபுள்ளி | மொத்தப் புள்ளி |
|---|---|---|---|
| 1. | கள் வியாபாரம் (அடிப்படை தகைமை) | 40 | 40 |
| 2. | உற்பத்தித்துறை (ஒன்றுக்கு 10 புள்ளிகள் வீதம் ஆகக் கூடுதலாக இரண்டு உற்பத்திகள்) | 10 X 2 | 20 |
| 3. | வியாபார நிலையங்கள், Palm City | 5 X 2 | 10 |
| 4. | கிராமிய வங்கிச் செயற்பாடு | 10 | 10 |
| 5. | சமூகநலத் திட்டங்கள் | 10X2 | 20 |
| | மொத்தம் | | 100 |

குறிப்பு – மேலே அட்டவணை 5இல் குறிப்பிட்ட சமூகநலத் திட்டங்களுக்கு புள்ளி வழங்கும் போது கீழ் குறிப்பிட்ட விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

- சமூகநலத் திட்டங்களுக்கென தனியான நடைமுறைவிதி உருவாக்கப்பட்டு ஆணையாளரின் அனுமதி பெற்றிருத்தல் வேண்டும்.
- சமூகநலத் திட்டங்களுக்கென ஒதுக்கப்படும் நிதி தனியான வங்கி கணக்குகளில் வைப்பிலிடப்பட்டிருத்தல் வேண்டும்.
- சமூகநலத்திட்டங்கள் மூலம் செலவினங்கள் மேற்கொள்ளும்போது திணைக்கள அனுமதி பெறப்பட்டிருத்தலை உறுதிப்படுத்தல் வேண்டும்.(மூன்று நிபந்தனைகளும் பூர்த்தி செய்தால் மட்டுமே புள்ளிகள் வழங்கப்பட முடியும்)

1. மொத்த உற்பத்தியில் விரயம்

சங்கத்தின் அங்கத்தவர்களின் மொத்த கள், பதனீர் உற்பத்தியில் ஊற்றுக்கழிவின் வீதம் "0" (பூச்சியம்) ஆக காணப்படின் 100 புள்ளிகளும் ஒவ்வொரு வீதத்திற்கும் 10புள்ளிகள் வீதம் ஆக்கூடுதலாக 10 வீதத்திற்கும் அதற்கு மேலும் "0" (பூச்சியம்) புள்ளிகள் வழங்கப்பட வேண்டும்.

2. பணியாளர்களின் சம்பளம்.

பணியாளர்களின் சம்பளம் மொத்த இலாபத்தில் 50% காணப்படின் ஆகக் கூடுதலாக 100 புள்ளிகளும், 100 % காணப்படின் ஆகக் குறைந்த புள்ளியான "0" (பூச்சியம்) உம் என்ற விகிதத்தில் புள்ளிகள் இடப்படல் வேண்டும்.

3. தொழிற்படு மூலதனம்

தொழிற்படு மூலதனம் 2:1 என்ற விகிதத்தில் காணப்படல் வேண்டும். இங்கு சொத்து 2 ஆக உள்ள போது பரிப்புகள் 1 ஆக காணப்படின் ஆகக்கூடுதலாக 100 புள்ளிகளும் சொத்து 1ஆக உள்ள போது பரிப்புக்களும் 1ஆக காணப்படின் ஆகக்குறைந்த புள்ளியான "0" (பூச்சியம்) உம் என்ற விகிதத்தில் புள்ளிகள் இடப்படல் வேண்டும்

தொழிற்படு மூலதனம் கணிப்பீடு செய்யும் போது கீழ்குறிப்பிடப்படும் அட்டவணையில் உள்ளதற்கமைவாக கணிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.

| இல | விபரம் |
|---|---|
| 01 | நடைமுறைச் சொத்துக்கள் |
| 1.1 | வியாபார பொருளிருப்பு |
| 1.2 | கடன்பட்டோர் (ஒரு வருடத்திற்கு உட்பட்ட நடைமுறை வருமதிகள்) |
| 1.3 | வருமதியாளர்கள் (ஒரு வருடத்திற்கு உட்பட்ட நடைமுறை வருமதிகள்) |
| 1.4 | முற்பணங்கள் (ஒரு வருடத்திற்கு உட்பட்ட நடைமுறை வருமதிகள்) |
| 1.5 | வங்கி வைப்புக்கள் (நடைமுறைக்கணக்கு மீதி, சேமிப்பு கணக்குமீதி, ஒரு வருடத்திற்குட்பட்ட நிலையான வைப்புகள்) |
| 1.6 | கையிருப்பு |
| 02 | நடைமுறைப் பரிப்புக்கள் |
| 2.1 | வைப்புக்கள் (சேமிப்பு வைப்புகளும் ஒரு வருடத்திற்குட்பட்ட நிலையான வைப்புகள்) |
| 2.2 | குறுங்கால கடன்கள் |
| 2.3 | கடன்கொடுத்தோர் (ஒரு வருடத்திற்கு உட்பட்ட நடைமுறை சென்மதிகள்) |
| 2.4 | சென்மதியாளர்கள் (ஒரு வருடத்திற்கு உட்பட்ட நடைமுறை சென்மதிகள்) |
| 2.5 | கூட்டுறவு நிதிச் சென்மதி |
| 2.6 | வங்கி மேலதிகப்பற்று |

மேற்படி கணிப்பீடானது அடிப்படை ஆண்டாக 2016/2017இல் முடிவடைந்த நிதியாண்டில் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கறிக்கைகளில் இருந்து பெறப்பட்ட தரவுகளில் இருந்து கணிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.

இவ்வாறு புள்ளிகள் கணிப்பிட்ட பின் நான்கு புள்ளிகளையும் கூட்டி வரும் விடையை நான்கால் வகுத்தபின் வரும் சராசரியானதற்கு பின்வரும் வகையில் தரப்படுத்துதல் வேண்டும்

| தரம் | சரசரிபுள்ளிகள் |
|---|---|
| A | 80 – 100 |
| B | 70 – 79 |
| C | 60 – 69 |
| D | 50 – 59 |
| E | 40 – 49 |
| F | 30 – 39 |
| G | 0 – 29 |

தரங்களின் பெறுபேற்று அடிப்படையில் சங்கப் பணியாளர்களது சம்பள அளவுத்திட்டங்கள் [illegible] மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும். சம்பளஅளவுத்திட்டங்கள் அதிகரிக்கும் போது அளணி அங்கீகாரத்தில் மாற்றங்கள் அனுமதிக்கப்பட்டபின் அதிகரித்த சம்பளத்தை வழங்குதல் வேண்டும். மாறாக சம்பள அளவுத்திட்டங்கள் குறைவடையும் போது ஏற்கனவே பதவிநிர்ணயம் செய்யப்பட்ட பணியாளர்கள் அப்பதவியில் இருந்து விலகும் வரை தாங்கள் பெற்று வந்த சம்பளத்தை பெற்றுக்கொள்ளலாம் என்ற நிபந்தனையின் அடிப்படையில் அளணி அங்கீகாரம் மீளாய்வுக்கு உட்படுத்துதல் வேண்டும்.

## ➢ கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களினை தரப்படுத்தல் செயற்திட்டம்

கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் தரத்திற்கமைவாக பணியாளர்களின் சம்பள வகைப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கமைவாக சங்கங்களை கீழ் குறிப்பிடப்படும் வகையில் மதிப்பீடு செய்யப்படவுள்ளது.

1. முயற்சிகளின் பல்வகைத்தன்மை
   இதன் அடிப்படையில் ஒவ்வொரு சங்கங்களும் பின்வரும் முயற்சிகளை மேற்கொள்ளும் போது அவற்றுக்கு தரப்பட்ட மதிப்பிடுகளின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும்.

| இல | முயற்சிகள் | மதிப்பிடப்பட்டபுள்ளி | மொத்தப் புள்ளி |
|---|---|---|---|
| 1. | கால்நடை தீவன வியாபாரம் (அடிப்படை தகைமை) | **40** | **40** |
| 2. | கால் சேகரிப்பு, விற்பனை நிலையம் | **10** | **10** |
| 3. | கால்நடை மருந்து விற்பனைநிலையம் | **10** | **10** |
| 4. | கால்நடைப்பண்ணை, இறைச்சிவிற்பனை | **10** | **10** |
| 5. | உணவு உற்பத்தி நடவடிக்கைகள் (ஒவ்வொன்ருக்கும் 5 புள்ளிகள் வீதம் ஆகக்கூடுதலாக 4 உற்பத்திகள்) | **5 X 4** | **20** |
| 6. | விவசாயப்பண்னை | **10** | **10** |
| | மொத்தம் | | **100** |

2. அங்கத்தவர் கடன் நடவடிக்கை
சங்க அங்கத்தவர்களுக்கு சுயதொழிலை ஊக்குவிப்பதற்காக வருடாந்தம் வழங்கும் கடன்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப புள்ளிகள் வழங்கப்படல் (ஒரு கடனாளிக்கு 2 புள்ளிகள் வீதம் ஆகக்கூடுதலாக 50 கடன்களுக்கு 100 புள்ளிகள் )

3. பணியாளர்களின் சம்பளம்.
பணியாளர்களின் சம்பளம் மொத்த இலாபத்தில் 50% காணப்படின் ஆகக் கூடுதலாக 100 புள்ளிகளும், 100 % காணப்படின் ஆகக் குறைந்த புள்ளியான "0" (பூச்சியம்) உம் என்ற விகிதத்தில் புள்ளிகள் இடப்படல் வேண்டும்

4. தொழிற்படு மூலதனம்
தொழிற்படு மூலதனம் 2:1 என்ற விகிதத்தில் காணப்படல் வேண்டும். இங்கு சொத்து 2 ஆக உள்ள போது பரிப்புகள் 1 ஆக கணப்படின் ஆகக்கூடுதலாக 100 புள்ளிகளும் சொத்து 1ஆக உள்ள போது பரிப்புக்களும் 1ஆக காணப்படின் ஆகக்குறைந்த புள்ளியான "0" (பூச்சியம்) உம் என்ற விகிதத்தில் புள்ளிகள் இடப்படல் வேண்டும்
தொழிற்படு மூலதனம் கணிப்பீடு செய்யும் போது கீழ்குறிப்பிடப்படும் அட்டவணையில் உள்ளதற்கமைவாக கணிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.

| இல | விபரம் |
|---|---|
| 01 | நடைமுறைச் சொத்துக்கள் |
| 1.1 | வியாபார பொருளிருப்பு |
| 1.2 | கடன்பட்டோர் (ஒரு வருடத்திற்கு உட்பட்ட நடைமுறை வருமதிகள்) |
| 1.3 | வருமதியாளர்கள் (ஒரு வருடத்திற்கு உட்பட்ட நடைமுறை வருமதிகள்) |
| 1.4 | முற்பணங்கள் (ஒரு வருடத்திற்கு உட்பட்ட நடைமுறை வருமதிகள்) |
| 1.5 | வங்கி வைப்புக்கள் (நடைமுறைக்கணக்கு மீதி, சேமிப்பு கணக்குமீதி, ஒரு வருடத்திற்குட்பட்ட நிலையான வைப்புகள்) |
| 1.6 | கையிருப்பு |
| 02 | நடைமுறைப் பரிப்புக்கள் |
| 2.1 | வைப்புக்கள் (சேமிப்பு வைப்புகளும் ஒரு வருடத்திற்குட்பட்ட நிலையான வைப்புகள்) |
| 2.2 | குறுங்கால கடன்கள் |
| 2.3 | கடன்கொடுத்தோர் (ஒரு வருடத்திற்கு உட்பட்ட நடைமுறை சென்மதிகள்) |
| 2.4 | சென்மதியாளர்கள் (ஒரு வருடத்திற்கு உட்பட்ட நடைமுறை சென்மதிகள்) |
| 2.5 | கூட்டுறவு நிதிச் சென்மதி |
| 2.6 | வங்கி மேலதிகப்பற்று |

மேற்படி கணிப்பீடானது அடிப்படை ஆண்டாக 2016இல் முடிவடைந்த நிதியாணடில் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கறிக்கைகளில் இருந்து பெறப்பட்ட தரவுகளில் இருந்து கணிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.இவ்வாறு புள்ளிகள் கணிப்பிட்ட பின் நான்கு புள்ளிகளையும் கூட்டி வரும் விடையை நான்கால் வகுத்தபின் வரும் சராசரியானதற்கு பின்வரும் வகையில் தரப்படுத்துதல் வேண்டும்.

| தரம் | சரசரிபுள்ளிகள் |
|---|---|
| A | 80 – 100 |
| B | 70 – 79 |
| C | 60 – 69 |
| D | 50 – 59 |

| | |
|---|---|
| E | 40 – 49 |
| F | 30 – 39 |
| G | 0 – 29 |

தரங்களின் பெறுபேற்று அடிப்படையில் சங்கப் பணியாளர்களது சம்பள அளவுத்திட்டங்கள் [illegible] அடிப்படையில் மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும். சம்பள அளவுத்திட்டங்கள் அதிகரிக்கும் போது அளணி அங்கீகாரத்தில் மாற்றங்கள் அனுமதிக்கப்பட்டபின் அதிகரித்த சம்பளத்தை வழங்குதல் வேண்டும். மாறாக சம்பள அளவுத்திட்டங்கள் குறைவடையும் போது ஏற்கனவே பதவிநிர்ணயம் செய்யப்பட்ட பணியாளர்கள் அப்பதவியில் இருந்து விலகும் வரை தாங்கள் பெற்று வந்த சம்பளத்தை பெற்றுக்கொள்ளலாம் என்ற நிபந்தனையின் அடிப்படையில் அளணி அங்கீகாரம் மீளாய்வுக்கு உட்படுத்துதல் வேண்டும்.

## ➢ மாவட்ட கூட்டுறவுச் சபைகளை தரப்படுத்தல் செயற்திட்டம்

மாவட்ட கூட்டுறவுச் சபைகளின் தரத்திற்கமைவாக பணியாளர்களின் சம்பள வகைப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கமைவாக சபைகளை கீழ் குறிப்பிடப்படும் வகையில் மதிப்பீடு செய்யப்படவுள்ளது.

5. முயற்சிகளின் பல்வகைத்தன்மை

   இதன் அடிப்படையில் ஒவ்வொரு சபைகளும் பின்வரும் முயற்சிகளை மேற்கொள்ளும் போது அவற்றுக்கு தரப்பட்ட மதிப்பீடுகளின் அடிப்படையில் புள்ளி வழங்கப்படும்.

| இல | முயற்சிகள் | மதிப்பிடப்பட்ட புள்ளி | மொத்தப் புள்ளி |
|---|---|---|---|
| 1. | கல்வி பயிற்சியளித்தல்<br>1. கனிஷ்டதரம், சாதாரணதரம், உயர்தர பயிற்சிகள் (10 புள்ளிகள்)<br>2. டிப்ளோமா பயிற்சிநெறிகள் (05 புள்ளிகள்)<br>3. சான்றிதழ் பயிற்சிகள் (05 புள்ளிகள்)<br>4. அங்கத்தவர் பயிற்சிகள் (ஒன்றுக்கு ஒரு புள்ளி வீதம் ஆகக் கூடுதலாக 10 புள்ளிகள்)<br>5. நிர்வாகசபை உறுப்பினர் பயிற்சிகள் (ஒன்றுக்கு ஒரு புள்ளி வீதம் ஆகக் கூடுதலாக 10 புள்ளிகள்)<br>6. பணியாளர் பயிற்சிகள் (ஒன்றுக்கு ஒரு புள்ளி வீதம் ஆகக் கூடுதலாக 10 புள்ளிகள்)<br>7. மகளீர் பயிற்சிகள் (05 புள்ளிகள்)<br>8. கணனிப் பயிற்சிகள் (05 புள்ளிகள்) | **60** | **60** |
| 2. | கலாச்சார நிகழ்வுகள்<br>1. கூட்டுறவு தின விழாக்கள் மற்றும் விசேட விழாக்கள் (10 புள்ளிகள்)<br>2. கண்காட்சிகள் (10 புள்ளிகள்)<br>3. போட்டிகள் (அங்கத்தவர், பணியாளர், பாடசாலை மாணவர்கள் ) (ஒன்றுக்கு ஒரு புள்ளி வீதம் ஆகக் கூடுதலாக 10 புள்ளிகள்)<br>4. மரநடுகை நிகழ்வுகள் (10 புள்ளிகள்) | **10 X 4** | **40** |
| | மொத்தம் | | **100** |

6. தேறிய இலாப வீதம்
சபையின் கணக்காய்வு செய்யப்பட்ட பகிர்வுக்கு முன்னரான இலாபம் மொத்த வருவாய்க்கு நூற்றுவீதத்தில் கணிப்பிடப்பட்டு பெறுபேறு பூச்சியத்திற்கும் பத்திற்குமிடையில் 1:10 என்ற விகிதத்தில் குறைந்தது "0" உம் கூடுதலாக 100 புள்ளிகளும் இடப்படல் வேண்டும்.

7. பணியாளர்களின் சம்பளம்.
பணியாளர்களின் சம்பளம் மொத்த இலாபத்தில் 50% காணப்படின் ஆகக் கூடுதலாக 100 புள்ளிகளும், 100 % காணப்படின் ஆகக் குறைந்த புள்ளியான "0" (பூச்சியம்) உம் என் விகிதத்தில் புள்ளிகள் இடப்படல் வேண்டும்

4. தொழிற்படு மூலதனம்
தொழிற்படு மூலதனம் 2:1 என்ற விகிதாசாரத்தில் காணப்படல் வேண்டும். இங்கு சொத்து 2 ஆக உள்ள போது பரிப்புகள் 1 ஆக கணப்படின் ஆகக்கூடுதலாக 100 புள்ளிகளும் சொத்து 1ஆக உள்ள போது பரிப்புக்களும் 1ஆக காணப்படின் ஆகக்குறைந்த புள்ளியான "0" (பூச்சியம்) உம் என்ற விகிதத்தில் புள்ளிகள் இடப்படல் வேண்டும்
தொழிற்படு மூலதனம் கணீப்பீடு செய்யும் போது கீழ்குறிப்பிடப்படும் அட்டவணையில் உள்ளதற்கமைவாக கணீப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.

| இல | விபரம் |
|---|---|
| 01 | நடைமுறைச் சொத்துக்கள் |
| 1.1 | வியாபார பொருளிருப்பு |
| 1.2 | கடன்பட்டோர் (ஒரு வருடத்திற்கு உட்பட்ட நடைமுறை வருமதிகள்) |
| 1.3 | வருமதியாளர்கள் (ஒரு வருடத்திற்கு உட்பட்ட நடைமுறை வருமதிகள்) |
| 1.4 | முற்பணங்கள் (ஒரு வருடத்திற்கு உட்பட்ட நடைமுறை வருமதிகள்) |
| 1.5 | வங்கி வைப்புக்கள் (நடைமுறைக்கணக்கு மீதி, சேமிப்பு கணக்குமீதி, ஒரு வருடத்திற்குட்பட்ட நிலையான வைப்புகள்) |
| 1.6 | கையிருப்பு |
| 02 | நடைமுறைப் பரிப்புக்கள் |
| 2.1 | வைப்புக்கள் (சேமிப்பு வைப்புகளும் ஒரு வருடத்திற்குட்பட்ட நிலையான வைப்புகள்) |
| 2.2 | குறுங்கால கடன்கள் |
| 2.3 | கடன்கொடுத்தோர் (ஒரு வருடத்திற்கு உட்பட்ட நடைமுறை சென்மதிகள்) |
| 2.4 | சென்மதியாளர்கள் (ஒரு வருடத்திற்கு உட்பட்ட நடைமுறை சென்மதிகள்) |
| 2.5 | கூட்டுறவு நிதிச் சென்மதி |
| 2.6 | வங்கி மேலதிகப்பற்று |

மேற்படி கணிப்பீடானது அடிப்படை ஆண்டாக 2016/2017 இல் முடிவடைந்த நிதியாண்டில் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கறிக்கைகளில் இருந்து பெறப்பட்ட தரவுகளில் இருந்து கணிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.

இவ்வாறு புள்ளிகள் கணிப்பிட்டபின் நான்கு புள்ளிகளையும் கூட்டி வரும் விடையை நான்கால் வகுத்தபின் வரும் சராசரியானதற்கு பின்வரும் வகையில் தரப்படுத்துதல் வேண்டும்.

| | சராசரிபுள்ளிகள் |
|---|---|
| A | 80 – 100 |
| B | 70 – 79 |
| C | 60 – 69 |
| D | 50 – 59 |
| E | 40 – 49 |
| F | 30 – 39 |
| G | 0 – 29 |

தரங்களின் பெறுபேற்று அடிப்படையில் சபைப் பணியாளர்களது சம்பள அளவுத் திட்டங்கள் மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும். சம்பள அளவுத்திட்டங்கள் அதிகரிக்கும் போது ஆளணி அங்கீகாரத்தில் மாற்றங்கள் அனுமதிக்கப்பட்டபின் அதிகரித்த சம்பளத்தை வழங்குதல் வேண்டும். மாறாக சம்பளஅளவுத்திட்டங்கள் குறைவடையும் போது ஏற்கனவே பதவிநிர்ணயம் செய்யப்பட்ட பணியாளர்கள் அப்பதவியில் இருந்து விலகும் வரை தாங்கள் பெற்றுவந்த சம்பளத்தை பெற்றுக்கொள்ளலாம் என்ற நிபந்தனையின் அடிப்படையில் ஆளணி அங்கீகாரம் மீளாய்வுக்கு உட்படுத்துதல் வேண்டும்.

- ➢ மாவட்ட மட்ட இரண்டாம்படி கூட்டுறவுச்சங்கங்களைத் தரப்படுத்தல் செயற்திட்டம்.

(சிக்கன கடனுதவு கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம்/ பனைதென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் ஏனைய இரண்டாம்படி கூட்டுறவுச்சங்கங்கள்.)

மாவட்ட மட்டத்தில் செயற்படும் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தரத்திற்கமைவாக பணியாளர்களின் சம்பள வகைப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கமைவாக மாவட்ட மட்ட இரண்டாம்படி கூட்டுறவுச்சங்கங்களை கீழ் குறிப்பிடப்படும் வகையில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

முயற்சிகளின் பல்வகைத்தன்மை

இதன் அடிப்படையில் ஒவ்வொரு சபைகளும் பின்வரும் முயற்சிகளை மேற்கொள்ளும் போது அவற்றுக்கு தரப்பட்ட மதிப்பீடுகளின் அடிப்படையில் புள்ளி வழங்கப்படும்.

| இல | முயற்சிகள் | மதிப்பிடப்பட்ட புள்ளி | மொத்தப் புள்ளி |
|---|---|---|---|
| 1. | கணக்காய்வில் தேறிய இலாபம் (அடிப்படைத்தகைமை) | 60 | 60 |
| 2. | சம்பள விகிதாசாரம் | 20 | 20 |
| 3. | தொழிற்படு மூலதன விகிதாசாரம் | 20 | 20 |
| | மொத்தம் | | 100 |

1. தேறிய இலாபம்.

இரண்டாம் படிக் கூட்டுறவுச்சங்கங்களின் கணக்காய்வு செய்யப்பட்ட பகிர்வுக்கு முன்னரான இலாபம்.

| இலாபத் தொகை | வழங்கப்படும் புள்ளிகள் |
|---|---|
| ரூபா 100000.00 வரை | 25 |
| ரூபா 100,001.00 - 200000.00 | 30 |
| ரூபா 200001 - 400000.00 | 35 |
| ரூபா 400,001.00 - 600000.00 | 40 |
| ரூபா 600,001.00 - 800000.00 | 45 |
| ரூபா 800,001.00 - 1000000.00 | 50 |
| ரூபா 1000,001.00 - 1200000.00 | 55 |
| ரூபா 1200,001.00 - 1400000.00 | 60 |
| ரூபா 1400001.00 - மேல் | 65 |
| | |

2. பணியாளர்களின் சம்பளம்.

பணியாளர்களின் சம்பளம் மொத்த இலாபத்தில் 50% காணப்படின் ஆகக் கூடுதலாக 20 புள்ளிகளும், 100 % காணப்படின் ஆகக் குறைந்த புள்ளியான "0" (பூச்சியம்) உம் என்ற விகிதத்தில் புள்ளிகள் இடப்படல் வேண்டும்

3. தொழிற்படு மூலதனம் .

தொழிற்படு மூலதனம் 2:1 என்ற விகிதத்தில் காணப்படல் வேண்டும். இங்கு சொத்து 2 ஆக உள்ள போது பரிப்புகள் 1 ஆக கணப்படின் ஆகக்கூடுதலாக 20 புள்ளிகளும் சொத்து 1ஆக உள்ள போது பரிப்புக்களும் 1ஆக காணப்படின் ஆகக்குறைந்த புள்ளியான "0" (பூச்சியம்) உம் என்ற விகிதத்தில் புள்ளிகள் இடப்படல் வேண்டும்.

தொழிற்படு மூலதனம் கணிப்பீடு செய்யும் போது கீழ்குறிப்பிடப்படும் அட்டவணையில் உள்ளதற்கமைவாக கணிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.

| இல | விபரம் |
|---|---|
| 01 | நடைமுறைச் சொத்துக்கள் |
| 1.1 | வியாபார பொருளிருப்பு |
| 1.2 | கடன்பட்டோர் (ஒரு வருடத்திற்கு உட்பட்ட நடைமுறை வருமதிகள்) |
| 1.3 | வருமதியாளர்கள் (ஒரு வருடத்திற்கு உட்பட்ட நடைமுறை வருமதிகள்) |
| 1.4 | முற்பணங்கள் (ஒரு வருடத்திற்கு உட்பட்ட நடைமுறை வருமதிகள்) |
| 1.5 | வங்கி வைப்புக்கள் (நடைமுறைக்கணக்கு மீதி, சேமிப்பு கணக்குமீதி, ஒரு வருடத்திற்குட்பட்ட நிலையான வைப்புகள்) |
| 1.6 | கையிருப்பு |
| 02 | நடைமுறைப் பரிப்புகள் |
| 2.1 | வைப்புக்கள் (சேமிப்பு வைப்புகளும் ஒரு வருடத்திற்குட்பட்ட நிலையான வைப்புகள்) |
| 2.2 | குறுங்கால கடன்கள் |
| 2.3 | கடன்கொடுத்தோர் (ஒரு வருடத்திற்கு உட்பட்ட நடைமுறை செலுமதிகள்) |
| 2.4 | செலுமதியாளர்கள் (ஒரு வருடத்திற்கு உட்பட்ட நடைமுறை செலுமதிகள்) |
| 2.5 | கூட்டுறவு நிதிச் செலுமதி |
| 2.6 | வங்கி மேலதிகப்பற்று |

மேற்படி கணிப்பீடானது அடிப்படை ஆண்டாக 2016/2017இல் முடிவடைந்த நிதியாண்டில் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கறிக்கைகளில் இருந்து பெறப்பட்ட தரவுகளில் இருந்து கணிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.

இவ்வாறு புள்ளிகள் கணிப்பிட்டபின் நான்கு புள்ளிகளையும் கூட்டி வரும் புள்ளிகளுக்கேற்ப தரங்களை நிர்ணயிக்க முடியும்.

| தரம் | சராசரிபுள்ளிகள் |
|---|---|
| A | 80 – 100 |
| B | 70 – 79 |
| C | 60 – 69 |
| D | 50 – 59 |
| E | 40 – 49 |
| F | 30 – 39 |
| G | 0 – 29 |

தரங்களின் பெறுபேற்று அடிப்படையில் பணியாளர்களது சம்பள அளவுத் திட்டங்கள் [illegible] [illegible] மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும். சம்பள அளவுத்திட்டங்கள் அதிகரிக்கும் போது அளணி அங்கீகாரத்தில் மாற்றங்கள் அனுமதிக்கப்பட்டபின் அதிகரித்த சம்பளத்தை வழங்குதல் வேண்டும். மாறாக சம்பளஅளவுத்திட்டங்கள் குறைவடையும் போது ஏற்கனவே பதவிநிர்ணயம் செய்யப்பட்ட பணியாளர்கள் அப்பதவியில் இருந்து விலகும் வரை தாங்கள் பெற்றுவந்த சம்பளத்தை பெற்றுக்கொள்ளலாம் என்ற நிபந்தனையின் அடிப்படையில் அளணி அங்கீகாரம் மீளாய்வுக்கு உட்படுத்துதல் வேண்டும்.

## ➢ ஏனையவகைச் சங்கங்களின் தரப்படுத்தல்.

ஏனைய வகை வகுதிக்குள் உள்ளடங்கும் கூட்டுறவுச் சங்கங்களை தரப்படுத்தல் செய்யற்திட்டமானது பின்வரும் குறிகாட்டிகளுக்கமைய அளவிட்டு அதற்கேற்ப அச் சங்கங்களின் தரங்களுக்கு ஏற்ற வகையில் பணித்தொகுதியை உருவாக்கிகொள்ள முடியும்.

I. முயற்சிகளின் பல்வகைத்தன்மை

இதன் அடிப்படையில் ஒவ்வொரு சங்கங்களும் பின்வரும் முயற்சிகளை மேற்கொள்ளும் போது அவற்றுக்கு தரப்பட்ட மதிப்பீடுகளின் அடிப்படையில் புள்ளி வழங்கப்படும்.

| இல | முயற்சிகள் | மதிப்பிடப்பட்ட புள்ளி | மொத்தப் புள்ளி |
|---|---|---|---|
| 1. | கணக்காய்வில் தேறிய இலாபம் (அடிப்படைத்தகைமை) | **60** | **60** |
| 2. | சம்பள விகிதாசாரம் | **20** | **20** |
| 3 | தொழிற்படு மூலதன விகிதாசாரம் | **20** | **20** |
| 4. | மொத்தம் | | **100** |

2. 4. தேறிய இலாபம்

இரண்டாம் படிக் கூட்டுறவுச்சங்கங்களின் கணக்காய்வு செய்யப்பட்ட பகிர்வுக்கு முன்னரான இலாபம்

| இலாபத் தொகை | வழுங்கப்படும் புள்ளிகள் |
|---|---|
| 50000.00 வரை | 25 |
| ரூபா 50,001.00 - 100000.00 | 30 |
| ரூபா 100,001.00 - 200000.00 | 35 |
| ரூபா 200,001.00 - 300000.00 | 40 |
| ரூபா 300,001.00 - 400000.00 | 45 |
| ரூபா 400,001.00 - 500000.00 | 50 |
| ரூபா 500,001.00 - 600000.00 | 55 |
| ரூபா 700001.00 - மேல் | 60 |
| | |

3. 5. பணியாளர்களின் சம்பளம்.

பணியாளர்களின் சம்பளம் மொத்த இலாபத்தில் 50% காணப்படின் ஆகக் கூடுதலாக 20 புள்ளிகளும், 100 % காணப்படின் ஆகக் குறைந்த புள்ளியான "0" (பூச்சியம்) உம் என்ற விகிதத்தில் புள்ளிகள் இடப்படல் வேண்டும்.

4. 6. தொழிற்படு மூலதனம்

தொழிற்படு மூலதனம் 2:1 என்ற விகிதத்தில் காணப்படல் வேண்டும். இங்கு சொத்து 2 ஆக உள்ள போது பரிப்புகள் 1 ஆக கணப்படின் ஆகக்கூடுதலாக 20 புள்ளிகளும் சொத்து 1ஆக உள்ள போது பரிப்புக்களும் 1ஆக காணப்படின் ஆகக்குறைந்த புள்ளியான "0" (பூச்சியம்) உம் என்ற விகிதத்தில் புள்ளிகள் இடப்படல் வேண்டும்

தொழிற்படு மூலதனம் கணீப்பீடு செய்யும் போது கீழ்குறிப்பிடப்படும் அட்டவணையில் உள்ளதற்கமைவாக கணீப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.

| இல | விபரம் |
|---|---|
| 01 | நடைமுறைச் சொத்துக்கள் |
| 1.1 | வியாபார பொருளிருப்பு |
| 1.2 | கடன்பட்டோர் (ஒரு வருடத்திற்கு உட்பட்ட நடைமுறை வருமதிகள்) |
| 1.3 | வருமதியாளர்கள் (ஒரு வருடத்திற்கு உட்பட்ட நடைமுறை வருமதிகள்) |
| 1.4 | முற்பணங்கள் (ஒரு வருடத்திற்கு உட்பட்ட நடைமுறை வருமதிகள்) |
| 1.5 | வங்கி வைப்புக்கள் (நடைமுறைக்கணக்கு மீதி, சேமிப்பு கணக்குமீதி, ஒரு வருடத்திற்குட்பட்ட நிலையான வைப்புகள்) |
| 1.6 | கையிருப்பு |
| 02 | நடைமுறைப் பரிப்புக்கள் |
| 2.1 | வைப்புக்கள் (சேமிப்பு வைப்புகளும் ஒரு வருடத்திற்குட்பட்ட நிலையான |

| | |
|---|---|
| | வைப்புகள்) |
| 2.2 | குறுங்கால கடன்கள் |
| 2.3 | கடன்கொடுத்தோர் (ஒரு வருடத்திற்கு உட்பட்ட நடைமுறை சென்மதிகள்) |
| 2.4 | சென்மதியாளர்கள் (ஒரு வருடத்திற்கு உட்பட்ட நடைமுறை சென்மதிகள்) |
| 2.5 | கூட்டுறவு நிதிச் சென்மதி |
| 2.6 | வங்கி மேலதிகப்பற்று |

மேற்படி கணிப்பீடானது அடிப்படை ஆண்டாக 2016/2017 இல் முடிவடைந்த நிதியாண்டில் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கறிக்கைகளில் இருந்து பெறப்பட்ட தரவுகளில் இருந்து கணிப்பீடு செய்யப்படுதல் வேண்டும். இவ்வாறு புள்ளிகள் கணிப்பிட்டபின் நான்கு புள்ளிகளையும் கூட்டி வரும் புள்ளிகளுக்கேற்ப தரங்களை நிர்ணயிக்க முடியும்.

| தரம் | சராசரிபுள்ளிகள் |
|---|---|
| A | 80 – 100 |
| B | 70 – 79 |
| C | 60 – 69 |
| D | 50 – 59 |
| E | 40 – 49 |
| F | 30 – 39 |
| G | 0 – 29 |

தரங்களின் பெறுபேற்று அடிப்படையில் பணியாளர்களது சம்பள அளவுத் திட்டங்கள் [illegible] மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும். சம்பள அளவுத்திட்டங்கள் அதிகரிக்கும் போது அளணி அங்கீகாரத்தில் மாற்றங்கள் அனுமதிக்கப்பட்டபின் அதிகரித்த சம்பளத்தை வழங்குதல் வேண்டும். மாறாக சம்பளஅளவுத்திட்டங்கள் குறைவடையும் போது ஏற்கனவே பதவிநிர்ணயம் செய்யப்பட்ட பணியாளர்கள் அப்பதவியில் இருந்து விலகும் வரை தாங்கள் பெற்றுவந்த சம்பளத்தை பெற்றுக்கொள்ளலாம் என்ற நிபந்தனையின் அடிப்படையில் அளணி அங்கீகாரம் மீளாய்வுக்கு உட்படுத்துதல் வேண்டும்.

பொ.வாகீசன்
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்,
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும் (வ.மா)